முற்பகல் 10—20

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொது கணக்குக் குழுத் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021—2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 13 முதல் 19 வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அறிவிப்புகள்

(அ) மாநில நூலகக் குழு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டப்படியாக அமைக்கப்பட்ட மாநில நூலகக் குழுவில் பணிபுரிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. வெற்றிஅழகன், திரு.* A.P. *நந்தகுமார், திரு. கடம்பூர் ராஜு ஆகியோரிடமிருந்தும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தில் பணிபுரிய மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் நா. எழிலன், திரு.* A.G. *வெங்கடாசலம், திரு. சு. ரவி ஆகியோரிடமிருந்தும் முறையாக வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன.*

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

மாநில நூலகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலமாகும். மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில

ஆலோசனை வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 16–வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாகத் தொடரும் வரை அலுவல் வழி உறுப்பினர்களாக பதவி வகிப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்நாளோடு அவ்வமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.